# SG Digital

## meWATCH தொடக்கக் கையேடு

## உங்களுக்குத் தெரியுமா?

நீங்கள் எங்கேயும், எப்போதும் இலவசமாகப் பொழுதுபோக்கை அனுபவிக்கலாம்! உங்களுக்குப் பிடித்த மீடியாகார்ப் நாடகங்கள் மற்றும் பொழுதுபோக்குத் தொடர்களை அனைத்து மொழிகளிலும், செய்திகள் மற்றும் இன்னும் பலவற்றையும் பார்க்கலாம். அதோடு, தொலைக்காட்சி ஒளிபரப்புக்கு முன்னதாகவே, புத்தம்புதிய நாடகங்களைக் கண்டு மகிழலாம்.

## படிநிலை 1 — meWATCH செயலியை உங்கள் கைப்பேசியில் நிறுவுங்கள்

**Apple App Store**, **Google Play Store** அல்லது **HUAWEI AppGallery**-க்குச் சென்று, **meWATCH** செயலியைப் பதிவிறக்குங்கள் மற்றும் நிறுவுங்கள்.

1. iOS பயன்படுத்துவோர், செயலியைப் பதிவிறக்க '**Get**' என்பதைத் தட்டுங்கள்.
2. Android அல்லது HUAWEI பயன்படுத்துவோர், செயலியைப் பதிவிறக்க '**Install**' என்பதைத் தட்டுங்கள்.

## படிநிலை 2 — ஒரு meCONNECT கணக்கை இலவசமாக உருவாக்கி, உள்நுழையுங்கள்

மீடியாகார்ப்பின் அனைத்து மின்னிலக்கச் சேவைகளிலும், **ஒரே meCONNECT கணக்கை** நீங்கள் பயன்படுத்தலாம்.

மாறாக, உங்கள் Apple, Facebook அல்லது Google கணக்கைப் பயன்படுத்தி உள்நுழையுங்கள்.




3. உங்கள் மின்னஞ்சல் முகவரியைப் பயன்படுத்தி, ஒரு புதிய meCONNECT கணக்கை உருவாக்குங்கள்.




4. உங்கள் பெயர் மற்றும் பிறந்த தேதி விவரங்களைச் சேர்ப்பதன் வழி கணக்கை உங்களுக்கு மட்டுமே உரியதாக்குங்கள்.




5. உங்களுக்குப் பிடித்த சில நிகழ்ச்சி வகைகளை எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். அதன் வழி, நீங்கள் விரும்பக்கூடிய நிகழ்ச்சிகளை நாங்கள் பரிந்துரை செய்வோம்!

## படிநிலை 3 — பார்க்கத் தொடங்குங்கள்



6. இலவச நிகழ்ச்சிகள் அடங்கிய ஒரு மிகப் பெரிய தொகுப்பைக் கண்டறியுங்கள்.




7. உங்களுக்குப் பிடித்த தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பாருங்கள் அல்லது நிரலில் 'Live TV' என்பதைத் தட்டுவதன் வழி தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் வழிகாட்டியைப் பாருங்கள்.




8. 'Continue Watching', நீங்கள் நிறுத்திய இடத்திலிருந்து நிகழ்ச்சியைத் தொடர்ந்து பார்க்க, உங்களின் அனைத்துச் சாதனங்களிலும் வகைசெய்யும்.




9. 'My List' என்பதைத் தட்டுவதன் வழி, நீங்கள் பின்னர் பார்க்க விரும்பும் நிகழ்ச்சிகளைக் குறித்துக் கொள்ளலாம்.

## இணையப் பாதுகாப்புக் குறிப்புகள் *(மீடியாகார்ப் வழங்கும் தகவல்)*

- உங்கள் உள்நுழைவு விவரங்களை மற்றவர்களுக்கு **வெளியிட வேண்டாம்**, ஏனெனில் அது உங்கள் கணக்குகள் மற்றும் தனிப்பட்ட தகவல்களுக்கு அங்கீகரிக்கப்படாத அணுகலுக்கு வழிவகுக்கும்.
- அங்கீகரிக்கப்படாத பயன்பாட்டைத் தடுக்க, **வலுவான கடவுச்சொல்லை** உங்கள் சாதனத்தில் பயன்படுத்துங்கள்.
- உங்கள் இணையக் கணக்கு ஊடுருவப்படும் அபாயத்தைக் குறைக்க, உங்கள் கடவுச்சொல்லை **அடிக்கடி மாற்றுங்கள்**.

SG:DIGITAL
INFOCOMM MEDIA DEVELOPMENT AUTHORITY